பேரறிஞர் அண்ணா பிறந்தநாளையொட்டி

# காவல்துறை - சீருடை அலுவலர்களுக்கு அண்ணா பதக்கங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, செப். 15-

**பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 129 தமிழக காவல்துறை மற்றும் சீருடை அலுவலர்கள்/பணியாளர்களுக்கு அண்ணா பதக்கங்கள் வழங்க முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.**

இதுகுறித்து தமிழ்நாடு அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

தமிழ்நாட்டில் காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை, சிறைகள் மற்றும் சீர்திருத்த பணிகள் துறை, ஊர்க்காவல் படை மற்றும் விரல்ரேகைப் பிரிவு துறைகளில் சிறப்பாக பணியாற்றிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை அங்கீகரிக்கும் வகையிலும், பணியில் ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்புடன் பணிபுரிந்ததை பாராட்டும் வகையிலும், ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15ம் நாள் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளன்று தமிழக முதலமைச்சரின் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு, காவல் துறையில் தலைமைக்காவலர் முதல் காவல் கண்காணிப்பாளர் வரையிலான 100 பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கும், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையில் தீயணைப்பு வீரர் முதல் துணை இயக்குநர் வரையிலான 10 பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கும், சிறைகள் மற்றும் சீர்திருத்த பணிகள் துறையில் முதல்நிலை சிறைக் காவலர் முதல் உதவி சிறை அலுவலர் வரையிலான 10 பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கும், ஊர்க் காவல்படையில் ஊர்க்காவல் படை வீரர் முதல் படைத்தளபதி வரையிலான 5 ஊர்க்காவல் படை அலுவலர்களுக்கும் மற்றும் விரல் ரேகைப் பிரிவில் 2 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கும், அவர்களின் மெச்சத்தகுந்த பணியினை அங்கீகரிக்கும் வகையில் "தமிழக முதலமைச்சரின் அண்ணா பதக்கங்கள்" வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும், தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையத்தில் பணி புரிந்து வரும் எஸ்.மந்திரமூர்த்தி, முன்னணி தீ அணைப்போர் 7807 மற்றும் ராமச்சந்திரன், தீ அணைப் போர். 8229 ஆகிய இருவரும் கடந்த 2023 டிசம்பர் 18ம் தேதி இரவு தாமிரபரணி ஆற்றின் கரையில் வெள்ளம் புகுந்த கிராமங்களில் இருந்து மிகவும் ஆபத்தான சூழ்நிலையிலும், மற்றும் மீட்பு பணி சவாலாக இருந்த நிலையிலும், படகுகள் மூலம் சுமார் 448 பேரை மீட்டு பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு வந்து சேர்த்தனர். அவர்களின் துணிச்சல் மற்றும் அர்ப்பணிப்பு செயலை பாராட்டி இருவருக்கும் "தமிழக முதலமைச்சரின் தீயணைப்பு பணிக்கான அண்ணா வீரதீர பதக்கம்" வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேற்கண்ட பதக்கங்கள் முதலமைச்சர் அவர்களால் பிறிதொரு விழாவில் வழங்கப்படும்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

தமிழ்கூறும் நல்லுலகமே மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறது!

# முதல்வரின் அமெரிக்கப் பயணம் தமிழகத்தின் வளர்ச்சிக்கு கிடைத்த வெற்றி!

## காங்கிரஸ் கட்சி மாநிலத் தலைவர் கு.செல்வப்பெருந்தகை அறிக்கை!

சென்னை, செப். 15-

தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் கு. செல்வப்பெருந்தகை விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-



தமிழ்நாடு முதல மைச்சராக பொறுப்பேற்ற மு.க. ஸ்டாலின் அவர்கள் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக தமிழகத்தை அனைத்து துறைகளிலும் வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்கிற வகையில் மிகச் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறார். தமிழகத்தில் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தி, வேலை வாய்ப்புகளை பெருக்குவதற்காக உள்ளூர் முதலீடுகளை திரட்டுகிற அதேநேரத்தில், அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதற்காக சென்னையில் அந்நிய முதலீட்டாளர்கள் மாநாட்டையும், வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொண்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கு பெரும் முயற்சிகளை மேற்கொண்டு மிகப்பெரிய வெற்றியை பெற்று வருகிறார். இந்நிலையில் கடந்த ஆகஸ்ட் மாதம் 27 ஆம் தேதி அமெரிக்க பயணத்தை மேற்கொண்டு சான்பிரான்சிஸ்கோ மற்றும் சிகாகோ நகரில் நடத்தப்பட்ட சந்திப்புகளின் பலனாக ரூபாய் 7616 கோடி முதலீடுகளை ஈர்த்து 11,516 நபர்களுக்கு வேலை வாய்ப்பு பெறுகிற வகையில் முதலமைச்சரின் முயற்சிகள் வெற்றி பெற்று மகத்தான சாதனை படைக்கப்பட்டுள்ளது.

உலகின் முன்னணி நிறுவனங்களாக விளங்கும் மைக்ரோசிப், கூகுள், பேபால், நோக்கியா, கேட்டர்பில்லர், அப்லைட் மெட்டீரியல்ஸ், ஈட்டன், அஷ்யூரன்ஸ், ராக்வெல் போன்ற உலகத்தரம் வாய்ந்த நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் முதல்வர் கையெழுத்திட்டிருக்கிறார். அதேபோல, போர்ட் நிறுவனம் சென்னை மறைமலை நகரில் தொடங்கப்பட்ட உற்பத்தியை நிறுத்திய நிலையில் மீண்டும் வாகன உற்பத்தியை தொடங்குவதற்கான ஒப்புதலை பெற்றிருக்கிறார். இதனால் 12,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. ஓசூரில் மின்னணு உற்பத்தி நிறுவனம் அமைக்க முதல்வர் முன்னிலையில் ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

அமெரிக்க பயணத்தில் நாள்தோறும் தொழில் முதலீடுகளை ஈர்க்கிற வகையில் புரிந்துணர்வு ஒப்பந்த செய்திகள் தமிழக நாளேடுகளில் தலைப்புச் செய்திகளாக வருவதை பார்த்து ஒட்டுமொத்த தமிழக மக்களே மகிழ்ச்சி கடலில் ஆழ்ந்து வருகிறார்கள். அமெரிக்க பயணத்தை வெற்றிகரமாக முடித்து தாயகம் திரும்புகிற போது சிகாகோ விமான நிலையத்தில் ஏராளமான அமெரிக்க வாழ் தமிழர்கள் முதல்வரை மகிழ்ச்சியோடு வழியனுப்பி வைத்தனர். இந்திய அமெரிக்க நாட்டு தொழில் முனைவோருக்கிடையே தொழில் முதலீடுகளை ஈர்த்து உறவுப் பாலம் அமைத்த தமிழக முதலமைச்சரை இன்றைக்கு நாடே பாராட்டிக் கொண்டிருக்கிறது.

இந்தியாவிலேயே தொழில் வளர்ச்சியிலும், முதலீடுகளை ஈர்ப்பதிலும் முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்துகிற முயற்சியில் தமிழக முதல்வரை பாராட்டுவது நமது கடமையாகும். மூன்றாண்டு காலத்தில் மட்டும் ஏற்கனவே 872 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், ஏறத்தாழ 10 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள முதலீடுகளும், 18 லட்சத்து 89 ஆயிரத்து 234 நபர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைப்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இதில் 234 திட்டங்கள் உற்பத்தியை தொடங்கி விட்டது. 4 லட்சத்து 16 ஆயிரத்து 717 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டு விட்டது. மற்ற ஒப்பந்தங்களும் படிப்படியாக தொடர்ந்து செயல்பாட்டுக்கு வரும் என்ற உறுதியை முதலமைச்சர் வெளிப்படுத்தியிருக்கிறார். உலகின் புகழ் பெற்ற நிறுவனங்களின் பட்டியலில் உள்ள 500 பார்ச்சூன் நிறுவனங்களில் 19 நிறுவனங்களில் இருந்து முதலீடுகளை ஈர்த்து முதலமைச்சர் சாதனை படைத்திருக்கிறார்.


இந்தியாவிலேயே தமிழகத்தை தொழில் வளர்ச்சியிலும், வேலை வாய்ப்பிலும் முன்னணி மாநிலமாக உயர்த்துகிற முயற்சியில் அமெரிக்க பயணத்தின் மூலம் முதலீடுகளுக்கான ஒப்பந்தங்களை போட்டு இன்று தமிழகம் திரும்பும் அவரை 'முதலீடுகளை ஈர்த்த முதல்வரே வருக வருக" என தமிழக மக்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு வரவேற்க கடமைப்பட்டுள்ளார்கள். அமெரிக்க பயணத்தின் ஒவ்வொரு நாளையும் கடமை உணர்ச்சியோடு தமிழகத்தை வளர்த்தெடுக்க வேண்டுமென்ற மிகுந்த ஈடுபாட்டுடன் தனது பணிகளை மனநிறைவோடு செய்து சென்னை திரும்புகிற தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களையும், அவருக்கு பெரும் துணையாக இருந்து மிகச் சிறப்பாக செயல்பட்ட தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா உள்ளிட்ட அரசு அதிகாரிகளையும் தமிழ்நாடு காங்கிரஸ் சார்பாக பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் பயணத்தின் வெற்றி தமிழகத்திற்கு கிடைத்த வெற்றி. தமிழகத்தின் வளர்ச்சிக்கும் வேலை வாய்ப்பிற்கும் கிடைத்த வெற்றி. தமிழ் கூறும் நல்லுலகமே உங்களை மிகுந்த மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறது, போற்றுகிறது.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

பேரறிஞர் அண்ணா 116வது பிறந்த நாள்! சென்னை, வள்ளுவர் கோட்டத்திற்கு அருகே உள்ள

# பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவிக்கிறார்!

## சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!



பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 116வது ஆண்டு பிறந்த நாளான 15.9.2024 இன்று காலை 10.00 மணி அளவில் சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணாதிருவுருவச்சிலைக்கு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் மற்றும் கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு உள்ளிட்ட கழக முன்னணியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகின்றனர்.

கழக மாநில அமைச்சர் பெருமக்கள், முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை, மருத்துவ அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தக அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**நே.சிற்றரசு**
செயலாளர்
சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

நாள்- 14-09-2024

இரா.நவநீதகிருஷ்ணன் தலைமை! கோவை தெற்கு மாவட்ட மீனவரணி முன்னாள் அமைப்பாளர்

# கோ.சி.மணிகண்டன் இல்லத் திருமண வரவேற்பு விழா!

## அமைச்சர்கள் சு.முத்துசாமி - அர.சக்கரபாணி - தா.மோ.அன்பரசன் வாழ்த்துரை!

கோவை, செப். 15-

கோவை தெற்கு மாவட்டம் பொள்ளாச்சி நகர கழக செயலாளர் இரா.நவநீதகிருஷ்ணன் தலைமையில், மாவட்ட மீனவர்அணி முன்னாள் அமைப்பாளர் கோ.சி.மணிகண்டன் இல்லத் திருமணவரவேற்பு விழா இன்று நடைபெறுகிறது.



இதில் அமைச்சர்கள் சு.முத்துசாமி, அர.சக்கரபாணி, தா.மோ.அன்பரசன், சா.சி.சிவசங்கர், மு.பெ.சாமிநாதன், கே.ஈஸ்வரசாமி. எம்.பி., மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் வள்ளல் நேசர் மருத்துவர் ஜெய.ராஜமூர்த்தி உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

கோவை மாவட்டம், பொள்ளாச்சி நகரம் நினைவில் வாழும் கோ.சி.சிவக்குமார் ஹேமா அவர்களின் புதல்வி பி.எஸ்.தாரணிக்கும், திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், உத்தமபாளையம் S.மாரிமுத்து (எ) பாபு சசிகலா தம்பதியரின் புதல்வன் Dr.M. அபிஷேக்.M.B.B.S., ஆகியோரின் திருமணவரவேற்பு விழா இன்று 15.09.2024 - (ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.00 மணிக்கு மேல் பொள்ளாச்சி கோவை சாலையில் உள்ள ஸ்ரீ கந்த மஹாலில் நடைபெறஉள்ளது.

இவ்விழாவில் முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, நகர கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்றப்பிரதிநிதிகள், அணிகளின் நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள், தோழமைக்கட்சிகளின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் கழக முன்னணியினர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.



புதுதில்லியில் கழகப் பொருளாளரும் மக்களவை கழகக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின். மக்களவை கழகக் குழு துணைத் தலைவர் தயாநிதி மாறன் ஆகியோர் நேற்று (14.09.2024) மறைந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி அவர்களின் திருவுடலுக்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, சீதாராம் யெச்சூரி அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களுக்கும் தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொண்டனர்.



மறைந்த சீதாராம் யெச்சூரி அவர்களின் உடலுக்கு நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி நேரில் சென்று, அஞ்சலி செலுத்தினார். "எந்த காலகட்டத்திலும், தான்கொண்ட கொள்கையில் சமரசம் செய்து கொள்ளாத மிகப்பெரிய தலைவராகத் திகழ்ந்தவர் சீதாராம் யெச்சூரி" என்றும் "அவரது மறைவு நாட்டிற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு" என்றும் பேட்டியின் போது கனிமொழி கருணாநிதி எம்.பி. கூறினார்.